1968 ஆகஸ்ட் 16]

பிறகு, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காகவேனும் கிணறுகள் தோண்டப்பட்ட புறம்போக்கு நிலங்களை பட்டா செய்து கொடுத்து, மின் இணைப்பு வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ? வருவாய்த் துறை அமைச்சரும் பக்கத்திலேதான் இருக்கிறார். அவரையும் கலந்தாலோசித்து புறம்போக்கு நிலங்களைப் பட்டா செய்து கொடுத்து, மின் இணைப்பு வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அங்கத்தினர் கூறுவது போன்று, வருவாய்த் துறை அமைச்சருக்கும் இதுபற்றி விண்ணப்பித்தாலும், அவர் பரிசீலனை செய்து, அதன் மேல் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, புறம்போக்கு நிலங்களில் கிணறு வெட்டுவது என்பது தண்ணீர் கிடைப்பதைப் பொறுத்துத்தான். தண்ணீர் இருப்பதாலேதான் அந்த இடங்களில் கிணறுகளை வெட்டுகிறார்கள். இதற்கு வருவாய்த்துறை அப்ஜெக்ஷன் செய்கிறது. ஆகவே, தண்ணீர் கிடைக்கக்கூடிய இடங்களில் வெட்டப்படும் கிணறுகள் உள்ள புறம்போக்கு நிலத்தை பட்டா செய்துகொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முதலிலே நான் எடுத்துச் சொன்னபடி, இந்த விஷயம் வருவாய்த் துறையிலே தீர்க்கப்பட வேண்டியது. அதன் பின்னர்தான் மின்சார வாரியம் மின்இணைப்புத் தர ஏற்பாடு செய்யும்.

Co-operative Sugar Factory in Satangulam

* 5 *Q*.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to start a Co-operative Sugar Factory in Satangulam in Tirunelveli district?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப்பிறகு, நெல்லை மாவட்டத்தில் பாரி கம்பெனிக்குச் சொந்தமான ஆலை ஒன்று பதனீரிலிருந்து சர்க்கரை செய்யக் கூடிய முறையில் இயங்கி வந்தது. அந்தப் பகுதியில் கச்சாப் பொருளான பதனீர் ஏராளமான அளவில் கிடைக்கிறது. ஆகவே, இலங்கையிலிருந்து வரக்கூடிய மக்களுக்கு வேலை கொடுத்து, மறுவாழ்வு அளித்து உதவ வேண்டிய நிலை தமிழக அரசுக்கு இருப்பதால் நெல்லை மாவட்டத்தில் சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டத்தைப் புனராலோசனை செய்யவேண்டும். நெல்லை மாவட்டத்தில் குலசேகரன்பட்டினம் அல்லது வேறு எந்த இடத்திலாவது சர்க்கரை ஆலையை நிறுவ அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: சாத்தான்குளத்தில் சர்க்கரை ஆலையை நிறுவும் திட்டம் இருக்கிறதா என்பது முதல் கேள்வி. கனம் உறுப்பினர் குறிப்பிடுகிற இடங்களில் ஆலைகளை அமைப்பதற்கான குறிப்பு ஒன்றும் இல்லை. 1963-ல் முன்னாள் அரசு நெல்லை மாவட்டத்திலுள்ள மேலக்களத்தூரில் கூட்டுறவுத் துறையில் ஒரு சர்க்கரை ஆலையை நிறுவ வேண்டுமென்று இந்தியப் பேரரசைக் கேட்டுக்கொண்டபோது அதற்கு இந்தியப் பேரரசு அனுமதி வழங்கவில்லை. போதிய கரும்பு விளைச்சல் இல்லையென்று காரணம் காட்டப்பட்டது. மீண்டும் அதைப் புனராலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டபோது, டாக்டர் கிருஷ்ணமூர்த்தி, திரு. பி. முரளி என்பவர்களைக்கொண்ட ஒரு வல்லுனர் குழு அமைக்கப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோயில் தாலுக்கா கரும்பு விளைச்சலுள்ள பகுதியாக இருப்பதால், அதை ஸ்ரீவில்லிபுத்தூரில் ஏற்படுத்தவிருக்கும் சர்க்கரை ஆலையுடன் இணைத்துவிடலாம் என்று வல்லுநர் குழுவினர் தெரிவித்தனர். கரும்பு விளைச்சல், தண்ணீர் வசதி, பாதை வசதிகளை ஆராய்ந்து மூன்று சர்க்கரை ஆலைகளை நிறுவ வேண்டுமென்று இந்த அரசு இந்திய அரசைக் கேட்டுக்கொண்டது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் இரண்டு ஆலைகளையும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒரு ஆலையையும் பொதுத்துறையில் நிறுவ இந்த அரசு கருதியது. 1966-ம் ஆண்டில் திரு. பி. ராமசந்திர ஆதித்தன் அவர்கள், நெல்லை மாவட்டத்தில், ஸ்ரீவைகுண்டம் தாலுக்காவில் நாளொன்றுக்கு ஆயிரம் டன் கரும்பு அரைக்கக்கூடிய அளவில் சர்க்கரை ஆலை ஒன்றை நிறுவ அனுமதி கோரியதை இந்த அரசு இந்திய அரசுக்கு சிபாரிசு செய்திருக்கிறது. இந்திய அரசாங்கத்திடமிருந்து அதுபற்றி இன்னும் பதில் வரவில்லை.

திரு. மு. ச. சிவசாமி: நெல்லை மாவட்டம், சாத்தான்குளம் உடன்குடி பகுதி மணல் பிரதேசமாக இருக்கிறது. அங்கு கரும்பே உற்பத்தியாகாது. பதனீரில் இருந்து சர்க்கரை உற்பத்தி செய்வது குறித்து ஏற்கெனவே அங்கே பாரி கம்பெனியார் பரிசீலனை நடத்தி, அப்படி அங்கே உற்பத்தி செய்வதும் கட்டுப்படியாகாது என்று அறிவித்திருக்கிறார்கள். அப்படி அறிவித்த பிறகும் இப்போது சர்க்கரை ஆலையை அங்கே ஏற்படுத்த நினைப்பது தவறான கொள்கை என்பதை தமிழக அரசு ஏற்றுக்கொள்கிறதா?

மூற்பகல்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலை ஒன்றைத் தொடங்குவது பற்றியது கேள்வி. பதனீரில் இருந்து சர்க்கரை தயாரிப்பது பற்றியதானால் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: புதிய சர்க்கரை ஆலை ஆரம்பிப்பதிலே நமது ராஜ்யக் கோட்டாவை விட்டுவிடக்கூடாது என்பதனால் சென்னை சர்க்கார் அதில் தீவிரமாக இருக்கிறதா? அல்லது இந்த நாட்டில் சர்க்கரை பற்றாக்குறை இருக்கிறது,

1968 ஆகஸ்ட் 16]

அதைப் போக்க வேண்டும் என்ற முறையில் சர்க்கார் தீவிரமாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது இருக்கிற சூழ்நிலையில் தமிழகத்தில் மூன்று சர்க்கரை ஆலைகளைத் துவக்க வாய்ப்பு இருக்கிறது. இவை துவக்கப்பட்டால் நம்முடைய மாநிலத் தேவையும் பூர்த்தியாகும், பிற மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்கிற வசதி ஏற்படக்கூடும் என்ற காரணத்தினால் இந்திய அரசுக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது. அவர்களது ஒப்புதல் வந்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

Departmental works

*6 Q.—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether construction of new buildings was carried out departmentally on experimental basis; and

(b) if so, whether any saving was effected thereby?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை. எனினும், ஒப்புந்தப்புள்ளிகளை ஒப்பந்தக்காரர்கள் கொடுக்க முன்வாராத நேர்வுகளில் அல்லது ஒப்பந்தக்காரர்கள் அதிகத் தொகைகளைக் கேட்ட நேர்வுகளில், சம்பந்தப்பட்ட பணிகளை துறை மேற்கொண்டு நிறைவேற்றியது.

(இ) துறை நிறைவேற்றிய சில பணிகளில் செலவு மிச்சமும் ஏற்பட்டது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மலிவு விலையில் கட்டடம் கட்டுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் சிலபல கட்டடங்களையாவது துறையினர் தாங்களே எடுத்து நடத்தி—பில்டிங் மெட்டீரியல்ஸ் சம்பந்தமாக ஒரு ஆராய்ச்சி செய்வதற்கு திட்டம் ஏற்படுத்த முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதற்கு இப்போது இடம் இல்லை. பி.டபிளியூ.டி. விதிகள் மாற்றப்படவேண்டும். அதுபற்றி அரசு யோசிக்கும்.

திரு. கே. விநாயகம் : பொதுக் கட்டடங்கள் கட்ட வேண்டுமென்றால் காண்டிராக்டர்களிடம் விட்டு கட்டவேண்டும் என்று இருக்கிறது. காண்டிராக்டர்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள ரேட்டு பழங்காலத்தில் நிர்ணயிக்கப்பட்டது, அது இப்போது எடுத்துக் கட்டுகிற கட்டடங்களுக்குக் கட்டுபடியாகவில்லை. அதனால்தான் எந்தப் புதுக் கட்டடங்களையும் காண்டிராக்ட்டில் எடுத்து வேலை செய்ய காண்டிராக்டர்கள் வருவதில்லை. ஆகவே இன்றைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு பழைய ரேட்டுகளை மாற்றி உயர்த்திக் கொடுக்க ஆராய்ச்சி நடத்தப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால் இப்போதுள்ள ரேட்டை போதிய அளவு உயர்த்திக் கொடுக்க சர்க்கார் முன்வருவார்களா ?